**Previous Examination date – 16.12.2017**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**M.C. 55/2016**

**Deposition of Witness R.W.1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **: குபேந்திரன்** | **Father/Husband's Name : வேம்படியான்** | |
| **Village** | **:** | **Taluk** | **:** |
| **Caste** | **:** | **Calling** | **:** |
| **Religion** | **:** | **Age** | **:** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 18.08.2025.**
**சாட்சி ஆஜர். சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.**

**முதல் விசாரணை**

1. என்னிடம் காட்டப்படும் பிரமாணவாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். மேற்படி பிரமாணவாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். நான் நடந்தவற்றை தான் சொல்லியுள்ளேன். நான் தாக்கல் செய்யும் 6 ஆவணங்களையும் எதிர்மனுதாரராகிய எனது தரப்பில் குறியீடு செய்யுமாறு வேண்டிக்கொள்கிறேன்.

| | |
|---|---|
| எ.சா.ஆ.1 | 04.10.2013 தேதியிட்ட 1ம் மனுதாரர் கொடுத்த புகாரில் பதிவு செய்யப்பட்ட அனைத்து மகளிர் காவல் நிலைய கு.எண்.21/2013-ன் முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல்( இந்த முதல் தகவல் அறிக்கையில் உள்ள சங்கதிக்கும் தற்போது கையில் உள்ள வழக்கிற்கும் எந்த வகையில் தொடர்பு என்று நீதிமன்றம் வினவியபோது கற்றறிந்த வழக்கறிஞர் பின்பு விளக்குவதாக கூறியதால் அந்த விளக்கம் மற்றும் தொடர்புக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது-Subject to relevancy) |
| எ.சா.ஆ.2 | 1ம் மனுதாரர் கொடுத்த புகாரில் பதிவு செய்யப்பட்ட அனைத்து மகளிர் காவல் நிலைய கு.எண்.21/2013-ன் இறுதியறிக்கை சான்றிட்ட நகல் (இந்த இறுதியறிக்கையில் உள்ள சங்கதிக்கும் தற்போது கையில் உள்ள வழக்கிற்கும் எந்த வகையில் தொடர்பு என்று நீதிமன்றம் வினவியபோது கற்றறிந்த வழக்கறிஞர் பின்பு விளக்குவதாக கூறியதால் அந்த விளக்கம் மற்றும் தொடர்புக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது-Subject to relevancy) |
| எ.சா.ஆ.3 | 16.07.2015 தேதியிட்ட 1ம் மனுதாரர் கொடுத்த புகாரில் பதிவு செய்யப்பட்ட அனைத்து மகளிர் காவல் நிலைய கு.எண்.22/2015-ன் முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல்(இந்த முதல் தகவல் அறிக்கையில் உள்ள சங்கதிக்கும் தற்போது கையில் உள்ள வழக்கிற்கும் எந்த வகையில் தொடர்பு என்று நீதிமன்றம் வினவியபோது கற்றறிந்த வழக்கறிஞர் பின்பு |

| | |
|---|---|
| | விளக்குவதாக கூறியதால் அந்த விளக்கம் மற்றும் தொடர்புக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது–Subject to relevancy) |
| எ.சா.ஆ.4 | 1ம் மனுதாரர் பெயரில் உள்ள சொத்து பட்டா சர்வே எண் 50/2A6A ன் பட்டா நகல் |
| எ.சா.ஆ.5 | 1ம் மனுதாரர் பெயரில் ஆவண எண் 1622/2023 என்ற கிரய பத்திரம் இருப்பதை காட்டும் 01.01.2020 முதல் 12.08.2025 வரையிலான இணையவழி வில்லங்க சான்று |
| எ.சா.ஆ.6 | சர்வே எண் 306 கொத்தனார் காலணி, கோதமங்கலம் என்ற இடத்தில் வீடு கட்டி வருவதற்கான GPS Map Camera வின் புகைப்படம் |

எனவே, எனது பிரமாணவாக்குமூலத்தில் எனது தரப்பு முதல்விசாரணையாக கருதி இம்மனுவை தள்ளுபடி செய்யுமாறு வேண்டிக்கொள்கிறேன்.

**முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2025.08.18 18:13:17 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.